# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,868 — 1969 අගෝස්තු 22 වැනි සිකුරාදා — 1969.8.22**

14,868 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 907 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 919 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 920 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 925 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 927 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

*1. படிகள்.*—*வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—*அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.*—*(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—*(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

*அரசாங்க அச்சகப் பகுதி,*
**கொழும்பு,**
**1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**பதில் அரசாங்க அழுத்தகன்.**

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப் பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. A58/ × 2132/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி பிரதம வித்தியாதிகாரி, கைப்பணி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கைப்பணி, பிரதம வித்தியாதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.9.5 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.9.12.

**குறிப்புகள்.—(i)** அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

**(ii)** விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

**(iii)** வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம் ;

**(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையது மாகும். நியமதாரி விதவைகள், அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்கு கட்டணம் செலுத்த வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர். இந்நோக்கத்துக்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% வீதம் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்தி லேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் ஆசிரியராக அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப் படும் 6 மாத காலத்துக்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் ;

(ii) நியமனம், முதற்கண் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும். நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித் துடைய ஒரு பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவர் முதற்கண் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார் ;

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பதவியில் உறுதிப்படுத்தப் படுதல், ஏனைய விடயங்களுடன் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளும் நிர்வாக விதிகளும், கல்விச் சட்டம், நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றில் விளுக்களைக் கொண்ட ஒரு பரீட்சையில் சித்தி அடைவதைப் பொறுத்ததாகும். விதிக்கப் பட்டுள்ள தகுதிகாண்/பரீட்சார்த்த/பதில் கடமை புரியும் காலத்துக்குள் இப்பரீட்சையில் சித்தி எய்தத் தவறின் 120 ஆம், 121 ஆம் இலக்க நிருவாக விதிகளின் ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத் திகதியிலிருந்து 4 வருட காலத்துக்குள் பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு II ஆந் தர உத்தி யோகத்தர்களுக்கான சிங்கள/தமிழ் தேசிய மொழியிலான பரீட்சையில் சித்தியடைய வேண்டும். இப்பரீட்சையில் சித்தி யடையத் தவறுமிடத்து அவரது சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலமாகக் கருதப்படும் ;

(v) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பதவியில் உறுதிப்படுத்தப்படு முன், தகுதிகாண்/பரீட்சார்த்த/பதில் கடமை புரியும் காலத் தில் மகாவித்தியாதிபதிக்கு திருப்தி அளிக்கும் முறையில் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கல்வி நிர்வாகத்தில் ஆரம்ப அல்லது உயர்தர மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஒரு துறையில் கல்வி அமைப்பும் அபிவிருத்தியும் ஆகியவற்றில் சமீப காலத்தில் ஏற் பட்டுள்ள விருத்திகளை மகாவித்தியாதிபதியால் அங்கீ கரிக்கப்படும் ஒரு முறையில் நுணுக்கமாய் படித்தல் ;

(ஆ) மேற்போந்த 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிப் பின் அடிப்படையில், அப்படிப்புகளால் ஏற்படும் அனுப வத்தை மாற்றி அமைத்து இலங்கைக்கு ஏற்ப எங்ஙனம் பிரயோகிக்கலாமென விரிவாக விளக்குதல்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—புதிய முறைப்படி நியமிக்கப்படுபவர்களுக்கு— ரூ. 8,400—10 × 480—13,200 வருடாந்தம். ரூ. 11,280 இல் இரண்டு வருடங்கள் தங்கலும் ரூ. 11,760 இல் வினைத்திறமைகாண் தடையும். புதிய முறைப்படி அல்லாது நியமிக்கப்படுபவர்களுக்கு— £ 600—10 × £ 30 — £ 900 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ஆ) 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 5 ந் திகதியன்று 30 வய துக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தினுல் வழங்கப்படும் பட்டம் பெற்றிருப்பதுடன் தொழிற்றுறை அல்லது தொழிற் றுறைக்கு—முன்னைய மட்டத்தில் தொழில் நுட்பக் கல்வி நிர்வாகத்தில் 10 வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற் றிருக்க வேண்டும். அல்லது

(ஈ) (i) ஐக்கிய இராச்சியத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங் கப்படும் உயர்தர தேசிய தராதரப் பத்திரம் அல்லது தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(ii) லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையத்தால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் பூரண தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும், இவற்றுடன் 15 வருடத்துக்குக் குறையாத கைத்தொழில்/படிப்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு அனுபவமும் பெற்றிருக்க வேண்டும் ;

(உ) சி. பா. த./க. பொ. த. பத்திரப் பரீட்சையில் அல்லது உயர்தர பரீட்சையொன்றில் தனது உத்தியோக கடமைகளை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படும் மொழியில் இலக்கியத்தில் அல்லது பாஷை யில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(ஊ) கல்வி ஆலோசகராக 3 வருடத்துக்குக் குறையாத சேவை அல்லது I ஆந் தர அதிபராக அல்லது கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபராக 5 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும் ;

(எ) கைப்பணி படிப்பிப்பதில்/நிர்வாகத்தில் அல்லது இவ்விரண்டிலும் குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—தொழில்நுட்பக் கல்வியுடன் தொடர்பு கொண்ட 10 வருடத் துக்குக் குறையாத சேவை புரிந்துள்ள கல்வி ஆலோசகர் அந்தஸ்துடைய உத்தியோகத்தர்கள் **அல்லது** தொழில்நுட்பக் கல்வியுடன் தொடர்பு கொண்ட 15 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்துள்ள தொழில் நுட்ப நிலைய சிரேஷ்ட (தொழில்) போதனுசிரியர்கள் அந்தஸ்துடைய உத்தியோகத்தர்கள் இப் பதவிக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங் களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மூ. கு.**— ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகை மையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான் றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம் ;

(ஊ) மேலுள்ள 4 (இ), (ஊ), (எ) ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் தராதரப் பத்திரங்கள் ;

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப் பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர் புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரி யிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆடு ஆகஸ்ட் மீ 15 ந உ.

8–1127/1—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

இலக்கம் ஏஎ 69/X.2126/69

## கமத்தொழில் திணைக்களம்

### பொறிமுறை மேற்பார்வையாளர் பதவிகள்

1. இல. ஏஎ 69/X 2126/69 கொண்ட 1969 ஆம் ஆண்டின் ஜூலை 25 ஆம் திகதிய அறிவிப்பின் பிரகாரம், 14,865 இலக்கம் கொண்ட 1969 ஆம் ஆண்டின் ஆகஸ்டு 1 ஆம் திகதியில் வெளியாகிய அரசாங்க வர்த்தமானியில் மேற்குறிக்கப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பப்பத்திரங்களின் முடிவு திகதி 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கின்றது என்று இத்தால் பொதுச் செய்தியாக தெரியப்படுத்தப்படுகின்றது.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆடு ஆகஸ்டு மீ 15 ந உ.

8–1127/2—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## தரைப்படைத் தலைமை நிலையம்

### உறுதுணைவர் பதவி

சேனுதிபதியின் கீழ் உறுதுணைவர் பதவிக்கு ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன் கீழ் காணப்படும் படிவத்தில் உள்ளபடி தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்திலுல் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பங்கள், குடியியல் நிருவாக உத்தியோகத்தரும் கணக்காளரும், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு 3, என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—ஆண்டொன்றிற்கு ரூபா 3,600—156—4,692.

3. **வயதெல்லை**—விண்ணப்பதாரர் 40 வயதிற்கு மேற்படாமலும் 23 வயதிற்கு கீழ்ப்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கு மேல் வயது வரையறை ஏற்புடையதன்று.

4. **கல்வியும் மற்றத் தகைமைகளும்.**—

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் சிரேட்ட தராதரப் பத்திரம் அல்லது அதற்கு சமமான அல்லது அதற்குக் கூடிய பரீட்சையில் சித்தியடைந்திருக்கிருர் என்பதற்கு போதிய அத்தாட்சி காட்ட வேண்டும்.

(ii) ஆங்கிலத்தில், நிமிடத்திற்கு 120 சொற்களுக்குக் குறையாத வேகத்தில் சுருக்கெழுதக்கூடியவர்களாகவும், நிமிடத்திற்கு 40 சொற்களுக்கு குறையாமல் தட்டச்சிலிடக்கூடியவர்களாகவும் விண்ணப்பதாரர்கள் இருக்க வேண்டும். அவர்கள் கடிதங்களுக்கு காட்டிய வழியில் பதில் வரையக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) செயலக வேலையில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(iv) விண்ணப்பதாரர்கள் மிகச் சிறந்த ஒழுக்க நடத்தையுடையவராகவும், உடல் நலம் வாய்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

5. **நியமன விதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளமுடையதுமாகும். விதவையர் அனுதையர் உபகாரச் சம்பள நிதிக்கு உதவுதொகை செலுத்த வேண்டும். ஒரு பெண் நியமனம் பெறவேண்டிவந்தால் அ. சே. சே. நிதிக்கு உதவு தொகை செலுத்த வேண்டும். 1957 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதியின் 372 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் நியதியின்படி உபகாரச்சம்பள நிலையை அடைவதற்கு அவர் உரித்துடையவராவர்.

6. **சேவை நிபந்தனைகள்.**— அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக "புதிதாகச் சேர்ந்தவர்" ஆகின்—

(i) அவர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் 3 ஆண்டுகளாகும்.

(ii) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழி அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கும் இப்பொழுதுள்ள அல்லது வருங்காலத்தில் புகுத்தக்கூடிய எந்தச் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அவர் இணங்கி நடப்பார் என்னும் நிபந்தனைக்குட்படுமாறு அவர் வேண்டப்படுவர்.

(iii) அவர் தமது தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் — செயலாற்றும் அறிவுபெற வேண்டும்.

(iv) தகுதிகாண்/சோதனைக் கால முடிவில் பிறவற்றுடன், I ஆம் தர, II ஆம் தர, III ஆம் தர சோதனைகளை நியமனத் திகதியிலிருந்து முறையே 1 ஆண்டு, 2 ஆண்டு, 3 ஆண்டு காலத்துள் சித்தியடைதலைப் பொறுத்து உறுதிப்படுத்தப்படுவர்.

விதிக்கப்பட்ட சோதனைகளை விதிக்கப்பட்ட காலத்தில் தேறத் தவறினுல் ஆண்டு ஏற்றங்களை இடை நிறுத்த வேண்டி நேரிடும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலும் ஒரு ஆறு மாத காலத்துள் அச் சோதனையில் தேருவிட்டால் இடை நிறுத்தம் நிறுத்தமாக மாற்றப்படும். குறித்த சோதனையில் தேறும் வரை அல்லது கீழுள்ள (V) ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையனவாக இருக்கும் வரை அத்தகைய நிறுத்தம் செயற்படும்.

(v) 120, 121 ஆம் நிருவாகப் பிரமாணங்களின் ஏற்பாடுகள் தகுதிகாண்/சோதனைக் கால முடிவில் விதிக்கப்பட்ட தேர்ச்சித் தரத்தை அடையத் தவறியோருக்கு ஏற்புடையனவாகும். (ஆங்கில மொழிமூலம் ஆட்சேர்க்கப்பட்டவர்களுக்கு மேற்படி (iii), (iv), (V) ஆம் பந்திகளிற் கூறப்பட்ட நிபந்தனைகள் ஏற்புடையனவாகும்).

7. விண்ணப்பதாரர் கீழ்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகளல்ல) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நான சான்றிதழ்களோ அல்லது உதவிநன்கொடை பெறும் பாடசாலை பிரமாணங்களுக்கிணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) மேற்படி 4 (ii), (iii) ஆம் பந்தியிற் கூறப்பட்ட கூடுதலான கல்வித்தகைமைகளேயும் மற்றைய தகைமைகளேயும் காட்டும் சான்றிதழ்கள்.

குறிப்பு : சான்றிதழ்களினதும் நற்சாட்சிப் பத்திரங்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

(இ) விண்ணப்பதாரரின் குணநலம், தகுதி சம்பந்தமான அண்மையில் பெற்ற இரண்டு நற்சான்றிதழ்கள் (அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரர்கள் நற்சான்றிதழ்கள் அனுப்பத் தேவையில்லே).

8. அரசாங்க சேவையில் நியமனங்கள் பெறுவதற்குரிய சேவைப் பொது நிபந்தனைகள் இவ்வரசாங்க வர்த்தமானியின் முதலாம் பகுதியின் இரண்டாம் உட்பிரிவின் ஆரம்பத்தில் பார்த்துக்கொள்க.

9. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அவ்விண்ணப்பங்களை திணைக்களத்தலைவர்கள் அனுப்பும்போது விண்ணப்பதாரர் குறுகிய அறிவித்தலில் நியமனத்தைப் பெற விடுவிக்கப்படுவாரா என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

10. கொழும்பில் நடக்கும் ஒரு பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் சமுகமாயிருப்பதற்கு விண்ணப்பதாரர்கள் ஆயத்தமாகயிருக்க வேண்டும். இது விடயமாக பிரயாணச் செலவு கொடுக்கப்பட மாட்டாது.

எம். நடராசா,
பதில் குடியியல் நிருவாக உத்தியோகத்தரும்
கணக்காளரும்.

தரைப்படைத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு 3,
1969.8.15.

## விண்ணப்பப் படிவம்

### உறுதுணைவர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் :———.
   (அ) குடும்பப் பெயர் :———.
   (ஆ) மற்றைய பெயர்கள் :———.
2. தபால் விலாசம் :———.
3. தேசிய இனம் அது எவ்வாறு பெறப்பட்டது :———.
4. (அ) பிறந்த திகதியும் இடமும் :———.
   (ஆ) 1969, செப்ரெம்பர், 12 ஆம் திகதியன்று வயது :———.
5. பாலினம் :———.
6. விவாகமானவரா அல்லது தனித்தவரா ? :———.
7. கூடுதலான கல்வித் தகைமைகள் :———.
8. அநுபவம் பற்றிய விபரங்கள் :———.
   (இவ்விளம்பரத்தின் 4 (ii), (iii) ஆம் பந்தியைப் பார்க்கவும்)
9. தற்போதைய தொழில் (உண்டானல்) :———.
10. நற்சாட்சிப்பத்திரங்கள் கொடுத்தவர்களின் பெயர்களும் நியமனங்களும் :
    (i) ———.
    (ii) ———.
11. வேறேதும் தகவல்கள் உளவாயின், அவை :———.

———.
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :———.

8–1132—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### வட்டார வித்தியாதிகாரி (விவசாயம்) பதவிகள்

மேற்குறித்த பதவிகள் சம்பந்தமாக 1.8.69 ஆந் திகதிய 14,865 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு கவனம் கோரப்படுகிறது.

2. மேற்குறித்த விளம்பரத்தின் 4 (ஆ) (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பின்வருமாறு அமைய வேண்டும் :—

பட்டதாரிகள் அல்லாதவரைப் பொறுத்தவரையில்—குறைந்தபட்சம் 8 வருட ஆசிரிய சேவையுடன் 1 ஆம் வகுப்பு பயிற்றப்பட்ட (சிங்கள/தமிழ்/ஆங்கில) ஆசிரியராய் இருக்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் 8 வருட ஆசிரிய சேவையுடன் 1 ஆம் வகுப்பு (சிங்கள/தமிழ்/ஆங்கில) ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராய் இருப்பதுடன் பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையால் விவசாயத்தில் வழங்கப்படும் தராதரப் பத்திரம் (2 ஆம் வகுப்பு விரும்பற்பாலது) பெற்றிருக்க வேண்டும்.

3. மேற்குறித்த தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் 31.8.69 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

நிரந்தரக் காரியதரிசியும்,
மகா வித்தியாதிபதியும்.

இல. பொ. நி/25/8,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந உ.

8–1024—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### நூல் நிலைய உதவிப் பொறுப்பாளர் பதவி

கீழே விதிக்கப்பட்டுள்ள தகைமைகளைத் திருப்தி செய்வோரிடமிருந்து கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள நூல்நிலைய உதவிப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறைக்கு அமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்தில் 1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவி தற்காலிகமானதும் உபகாரச் சம்பள உரித்தற்றதுமாகும். அரசினர் சேவை சேமலாப நிதிக்கு கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசினர் சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராயின் அரசினர் கருமமொழிக் கொள்கை நோக்கங்களின் பொருட்டு தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும் ;

(iii) அரசினர் சேவையில் நிரந்தர பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தீவின் எப்பகுதியிலேனும் கடமைபுரிய வேண்டும் ;

(v) நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு நடைபெறும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ரூ. 1,320—19 × 72—2,688 வருடாந்தம். வாடகைப்படி, சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி ஆகியவை அரசினர் விதிகளின்படி வழங்கப்படும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்பவராக திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :

(அ) கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு அலுவலகத்தில் அல்லது இவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் எதிலேனும் வேலையாளராக இருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று 20 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது)

(இ) சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி எண்கணிதம்/கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் க. பொ. த. ப. பரீட்சையில் (சாதாரணதர) அல்லது சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(ஈ) நூல்நிலைய வேலையில் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்;

(உ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள், வேண்டப்படுமிடத்து பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் ;

(ஆ) உயர்தொழிற் தராதரப் பத்திரங்கள் ;

(இ) நூல்நிலைய வேலையில் பெற்றுள்ள அனுபவம் தொடர்பான சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களேனும் அவற்றின் பிரதிகளேனும் விண்ணப்பப் படிவத்துடன் **இணைத்தனுப்பப்படலாகா.**

(2) வேண்டப்படும் நேரத்தில் இச்சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்பட மாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். எனினும், விண்ணப்பத்தின் ஒரு பிரதி கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு நேரே அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், அவைகள் சம்பந்தப்பட்ட திணைக்கள/நிலையத் தலைவரால் விதிக்கப்பட்ட திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளப்பட்டதெனவும், போதிய காரணங்காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

7. அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் அரசினர் வர்த்தமானியின் I ம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகின்றது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இத்தகைய அறிவித்தலைப் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இத்தேவைக்கமைய ஒழுகத்தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ. நி. 30/223,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 15 ந வ.

## (மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவம்)

**விண்ணப்பப் படிவம் 8½" × 13½" அளவு முழுத்தாளில் தயாரிக்கப்பட வேண்டும்**

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**நூல்நிலைய உதவிப் பொறுப்பாளர் பதவி**

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) :————.
2. நிரந்தர விலாசம் :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி சரியான வயது:————. வரு. :———, மா :———, நாள் :———. பிறந்த திகதி :———.
5. பின்வருவோர் பிறந்த இடம்—
   (அ) விண்ணப்பதாரி :————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் :————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் :————.
6. வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா இலங்கையர் :————.
7. கல்வித் தகைமைகள் :—
   (i) பொது :————.
   (ii) நூல்நிலைய வேலையில் பெற்றுள்ள அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் விபரங்கள் :————.
   (iii) சிங்களத்தில் தமிழில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை பற்றிய விபரங்கள் :————.
8. அறிவித்தலின் 4 (ஈ) ஆம் பந்தியின் கீழ் கேட்டுள்ள சேவை பற்றிய விபரங்கள் :————.
   (சேவை புரிந்த நிலையம், சேவைக்காலம், வகித்த பதவி ஆகிய விபரங்கள் கொடுக்கப்பட வேண்டும்)
9. விவாகம் செய்தவரா செய்யாதவரா தாரமிழந்தவரா :————.
10. சட்டமுறை நீதி மன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் கீழ்க்காணும் விபரங்களைக் கொடுக்க :—
    (அ) திகதி :————.
    (ஆ) வழக்கு எண் :————.
    (இ) குற்றத்தின் தன்மை :————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? உமக்குப் பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு :————.
12. உமக்கெதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை தொடரப்பட்டிருக்கிறதா ? அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும் :————.
13. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—
    (அ) படைக்கூற்றின் பெயர் :————.
    (ஆ) வகித்த பதவி :————.
    (இ) சேர்ந்த விலக்கப்பட்ட திகதிகள் :————.
14. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :—
    (i) வகித்த பதவி :————.
    (ii) சேர்ந்த விலகிய திகதிகள் :————.
    (iii) விலகியதற்கான காரணம் :————.
15. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும், (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.
16. இப்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :—
    (i) நிலையம் :————.
    (ii) பதவிப் பெயரும் அதன் தரமும் :————.
    (iii) நியமனத் திகதி :————.
    (iv) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா தற்காலிகமானதா சமயோசிதமா ? :————.
    (v) சகாயப்படிகள் நீங்கலாக தற்போதைய சம்பளமும் சம்பள விகிதமும் :————.
    (vi) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.
17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

### திணைக்கள/நிலையத் தலைவரின் அத்தாட்சிப்பத்திரம்

எனதெண் :
உங்கள் எண் : பொ/நி/30/223

க. க. அ. அமைச்சின் நிரந்தர காரியதரிசி.

இவ்விண்ணப்பம் விண்ணப்பமுடிவுத் திகதிக்கு முன்/பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

பின்வரும் திருத்தங்கள் உட்பட* இவ்விண்ணப்பத்தில் ...... பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவையென அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.............................................................

.............................................................

.................,
திணைக்கள/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் : .........:

திகதி :————.

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

8-1124—22.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,868

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கு, கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவமுறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு நிரந்தரச் செயலாளர், (பொது நிர்வாகக் கிளை) கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும் :—

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்தற்றதுமாகும். அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும்.

(ii) அரச கருமமொழித் தேவைகளைப் பொறுத்தவரையில் நியமதாரி அரசாங்க சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின் அவரது தகுதிகாண்காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினர் சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய நியமனம் விதிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு பதில் நியமனமாக அமையும்.

(iv) நியமதாரி இத்தீவின் எப்பகுதியிலும் கடமைபுரிய வேண்டும்.

(v) தெரிவு நேர்முகப் பரீட்சை செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :— 1,620—18 × 120—3,780 வருடாந்தம். ரூ. 2,820 வருடாந்தச் சம்பளம் பெறுமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆகியன அரசாங்கப் பிரமாணங்களுக்கமையக் கொடுபடும்.

**4. தகைமைகள்**

**(i) அரசாங்கத் திணைக்கள வேலையாளர்கள்.—**

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையம் ஒன்றில் கடமை புரிபவராக,

(ஆ) கீழ்க்காணும் 4 (ii) ம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பவராக.

**(ii) வெளியக விண்ணப்பதாரிகள்.—**

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமாக சான்று காட்ட வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவரென (அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையா),

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவரென,

(இ) இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி பௌதிகவியல், இரசாயன வியல், கணிதம், (தூய அல்லது பிரயோக), உயிரியல் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் அல்லது இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் (தூய அல்லது பிரயோக) உயிரியல் ஆகிய பாடங்களுடன் சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது சமமான வேறொரு பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதாக,

(ஈ) மரவேலை இயந்திரங்கள், உலோக வேலை இயந்திரங்கள் ஆகியவற்றை இயக்குதல், நுணுக்குக்காட்டி, இரசாயனவியல் தராசு, நிறுத்தற் கடிகாரம் ஆதியன போன்ற விஞ்ஞான உபகரணங்களைப் பழுதுபார்த்தலும் பேணுதலும், மின்சார அளவைக் கருவிகளுக்கு அளவுகோடு வரைதலும் பரீட்சித்தலும். ஏ. சீ./டீ. சி. மோட்டார்ப் பொறிகள் ஆமேசர்களைச் சுற்றுதல் ஆகியவற்றில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருப்பவராக.

(அரசினர் தொழில்நுட்ப நிலையம் ஒன்றில் தொழில்நுட்பப் பயிற்சி பெற்று கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் தராதரப் பத்திரம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

குறிப்பு.—திணைக்கள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படாவிடின் மாத்திரமே வெளியக விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படும்.

5. பின்வரும் சாதனங்களில் ஒன்றையேனும் கூடியவற்றையேனும், வேண்டப்படுமிடத்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

(அ) சி. பா. த. அல்லது க. பொ. த. பத்திரம்.

(ஆ) மேலுள்ள 4 (ii) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரப் பத்திரங்கள்.

(இ) சிங்களத்தில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்

(ஈ) சிறப்புச் சாட்சிப் பத்திரம்.

குறிப்பு.— (i) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படலாகா.

(ii) வேண்டப்படும் நேரத்தில் தேவையான சாதனங்களை சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. **விண்ணப்பதாரிகள்** விண்ணப்பங்களை தமது திணைக்கள/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். அத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படுமிடத்து விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் திணைக்கள/நிலையத் தலைவர்களால் அவை பெற்றுக் கொள்ளப்பட்டனவெனவும் அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு போதிய காரணங்காட்டி அத்தலைவர் சிபார்சு செய்தாலுமன்றி அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. இவ்வர்த்தமானியில் I ம் பகுதி, II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. **விண்ணப்பங்கள்** பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்படமை பற்றிய அறிவித்தலை பெறத்தவறும் விண்ணப்பதாரி ஒருதவர் அதனை கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ. நி/30/182,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள்**

1. முழுப்பெயர் (தெளிவாக) :————.
2. நிரந்தர தபால் விலாசம் :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி சரியான வயது :———. பிறந்த திகதி :————.
5. பின்வருவோர் பிறந்த இடம்—
   (அ) விண்ணப்பதாரி :————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.
6. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் :———.
7. கல்வித் தகைமைகள் :————.
   (i) பொது :————.
   (ii) உயர்தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும் பற்றிய விபரங்கள்:————.
   (iii) சிங்களத்தில்/தமிழில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை பற்றிய விபரங்கள் :————.
8. 4 ம் பந்தியின் (ii) (இ) ம் உப பிரிவின் கீழ் புரிந்த சேவை பற்றிய விபரங்கள் :————.

| பதவி | சேவைபுரிந்த நிலையம் | சேவைபுரிந்த காலம் |
|---|---|---|
| | | |

மொத்தம் :————.

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா?————.

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு?.————.

12. உமக்கு எதிராக யாதேனும் ஒழுக்க நவடிக்கை எடுக்கப்பட்டதா? எடுக்கப்பட்டிருப்பின் அது பற்றிய விபரங்கள் :————.

13. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—
(அ) படைக்கூற்றின் பெயர் :————.
(ஆ) வகித்த பதவி :————.
(இ) சேர்ந்த விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

14. பாடசாலையிலிருந்து விலகிய காலம்தொடக்கம் புரிந்த உத்தியோகம் பற்றிய விபரங்கள்—
(i) வகித்த பதவிகள் :————.
(ii) சேவை புரிந்த காலம் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.

15. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

(இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும்.————.

16. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள்—
(i) நிலையத்தின் பெயர் :————.
(ii) பதவியும் அதன் தரமும் :————.
(iii) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :————.
(iv) நியமனம் உபகாரச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா? :————.
(v) சகாயப்படிகள் நீங்கலாக தற்போதைய சம்பளமும் சம்பள விகிதமும் :————.
(vi) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விணைப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
திகதி :————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)**

உங்கள் எண் :ஜீ.எ.30/182
எனது எண் :

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு.

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைவதற்கான திகதியின் முன்/பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை.* விண்ணப்பம் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

————,
பகுதி/நிலையத் தலைவரின்
கையொப்பம்.

திகதி :————.

*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

8–1125—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல 14,868

---

இல. வெ. மு./2/189.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### ஹவாய் பல்கலைக் கழக புலமைப் பரிசில்கள், 1970

கீழநாடு, மேலை நாடுகளுக்கிடையில் கலாச்சார தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கான நிலையத்தால் பட்டப்பின் படிப்புகளுக்கு ஹவாய் பல்கலைக் கழகத்தில் செல்லுபடியாக வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புலமைப் பரிசில்கள் பின்வரும் துறைகளில் வழங்கப்படுகின்றன :—

| | |
|---|---|
| நூல்நிலைய விஞ்ஞானம் | பூச்சியியல் |
| கல்வி | நுண்ணுயிரியல் |
| புவியியல் | கடற்றொழில் உயிரியல் |
| புவிச்சரிதவியல் | உயிர் இரசாயனவியல் |
| பொருளியல் | உயிர் பௌதிகவியல் |
| தொழில் நிர்வாகம் | விவசாய எந்திரவியல் |
| குடிசார் எந்திரவியல் | விவசாய பொருளியல் |
| மின்சார எந்திரவியல் | மண் வளவியல் |
| கணிதம் | மண்ணியல் |
| பௌதிகம் | தோட்டச் செய்கை |
| இரசாயனம் | மனிதப் பிறப்பியல் |
| தாவரவியல் | மருத்துவவியல் |
| விலங்கியல் | |

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக் கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.** புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப் படுத்தி அச்சுற்று நிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு 2.** சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 9 தொடக்கம் 24 மாத கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஹவாய் அதிகாரிகளின் தற்றுணிபுக் கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.1969 அன்று 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராய் இருக்கவேண்டும்.

(iii) குறைந்த பட்சம், அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) இதற்குமுன் அமெரிக்கப் பல்கலைக் கழகம் எதிலேனும் படிப்பித்தல் அனுபவம் பெற்றிருக்கப்படலாகாது.

(v) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (இப் புலமைப் பரிசில்களுக்கு நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஆங்கிலத்தை அந்நிய மொழியாகக் கருதும் ஒரு பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தமாய் இருக்கவேண்டும். அனுமதி முறைகளின் ஒரு பகுதியாக, பிறநாட்டு மாணவர்களின் ஆங்கிலத் தேர்ச்சியை மதிப்பிடும் முறையில் இப்பரீட்சை பிரதானமாக அமையும். 3½ மணித்தியால இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். இத்தொடர்பில் அபேட்சகர்கள் பதிவுக் கட்டணமாக 10 டொலர் செலுத்த வேண்டும். எனினும் பரீட்சைக்குத் தோற்றும் நேரத்தில் அபேட்சகர்கள் இதனைக் கொடுக்க வேண்டியதில்லை. அபேட்சகர்களுக்கு இறுதியில் புலமைப் பரிசில் வழங்கப்படுமிடத்து மட்டுமே, ஹவாய்க்குப் ( **Hawaii** ) போனபின் குறித்த

பதிவுக் கட்டணத்தை கீழநாடு மேலநாடு நிலையத்துக்கு அவர்கள் கொடுக்க வேண்டும். இத்தொகை அவர்களுக்குக்கொடுபடும் சகாயப்படிகளிலிருந்து 10 டொலர்களைக் கழிப்பதன்மூலம் அறவிடப் படும். பரீட்சை சம்பந்தமான விபரங்கள் அபேட்சகர்களுக்குக் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்).

**குறிப்பு 1.** அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப் பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1969 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.** தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பிதற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) ஹவாய்க்குப் போய்த்திரும்புதற்கான பயணச் செலவு.
(ஆ) கற்கையும் புத்தகங்களும்.
(இ) உணவுச் சகாயப்படியும் உறையகமும்.
(ஈ) சுகாதாரக் காப்புறுதி.
(உ) சொந்தச் செலவுக்கான சிறு தொகைச் சகாயப்படி.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஹவாய்க்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன் படிக்கை செய்து கொள்ளவேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள் சகாயப்படிகள் ஆகியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஹவாயில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன் மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப் படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக் கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப் படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப் படவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப் படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 15 ந வ.

8-1123—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மனையியல் வட்டார வித்தியாதிகாரி (சிங்கள/தமிழ்) பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள வட்டார வித்தியாதிகாரி (மனையியல்) பதவிகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறைக்கமைய தயாரிக்கப்பட்டு நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை) கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். எனினும், நியமனம், முதற்கண் சேமலாப நிதி அடிப்படையில் அமையும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசினர் சேவை சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 5% கட்டணம் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட மொத்த சேவையைப் பூர்த்தி செய்யுமுன் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறாரென தமது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய ஆசிரியராக அல்லது சேமலாப நலனுடைய ஒரு பதவியில் அல்லது இவ்விரு பதவிகளினும் ஏற்கனவே 10 வருட் சேவை பூர்த்தி செய்திருப்பின் நியமனத் திகதியிலிருந்து 6 மாத காலத்துக்குள் அவர் தமது விருப்பத்தை அறிவிக்க வேண்டும்.

(ii) நியமனம், முதற்கண், 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும். ஏற்கனவே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார்.

3. **சேவை நிபந்தனைகள்.**—(I) புதிய முறைப்படி அரசினர் சேவைக்கு நியமிக்கப்படுபவரைப் பொறுத்தவரையில் அரச கரும மொழிக்கொள்கை நோக்கங்களின் பொருட்டு—

(i) தகுதிகாண்/பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்தும்பொருட்டு குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் பொருட்டு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளவையும் இனிமேல் செய்யப்படக் கூடியவையுமான விதிகளுக்கமைய வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டும்.

(iv) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் நியமனத்தில் உறுதிப்படுத்தப்படுதல், ஏனைய விடயங்களுடன், விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளில் விதிக்கப்பட்ட காலங்களுள் சித்தியடைதலைப் பொறுத்ததாகும். விதிக்கப்படும் காலங்களுள் இப்பரீட்சைகளில் சித்தியடையத் தவறின் சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தஞ் செய்யப்படும். விதிக்கப்பட்ட காலத்திலிருந்து மேலும் 6 மாத காலத்துக்குள் இப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறின் இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட சம்பளம் நிறுத்தப்படும். பரீட்சையில் சித்தி எய்தும்வரை இச்சம்பளம் தொடர்ந்து நிறுத்தப்படும்.

(v) தகுதிகாண் பரீட்சார்த்த கால முடிவில் விதிக்கப்பட்டுள்ள சிங்கள தேர்ச்சி பெறப்படாவிடின் 120 ஆம், 121 ஆம் இலக்க நிர்வாக விதிகளின் ஏற்பாடுகள் அமையும், தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்ப்படுவோருக்கு iii ஆம், iv ஆம், v ஆம் நிபந்தனைகள் அமையமாட்டா.

(II) (i) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சையில் தேறமுன் நிறைவேற்று எழுதுவினைஞர் சேவை இரண்டாம் வகுப்பு உத்தியோகத்தருக்கு விதிக்கப்பட்டுள்ள தேசிய மொழிகளிலான பரீட்சையில் (தமிழ் உத்தியோகத்தர்கள்) சிங்களத்திலும் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழிலும் தேற வேண்டும். இரண்டாவது வினைத்திறமைகாண் தடையில் சித்தியெய்திய உத்தியோகத்தர்கள் மூன்றாவது வினைத்திறமைகாண் தடைக்கு மேலே செல்லுமுன் மேற்குறித்த பரீட்சையில் தேறவேண்டும். அங்ஙனம் தவறுமிடத்து அவர்களுடைய சம்பள உயர்ச்சிப்பணம் பிற்போடப்படும். அனுமதிக்கப்பட்டுள்ள காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப் பணம் பின்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் விதிகள் பிரமாணங்கள் ஆகியவற்றில் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிர்வாக விதிகள், நிதிப் பிரமாணங்கள் கல்விச் சட்டம் ஆகியவற்றிலான வினாத்தாள்களைப் கொண்ட ஒரு பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். அனுமதிக்கப்பட்டுள்ள காலத்துக்கு மேலதிகமான எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப்பணம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும். இப்பரீட்சை சம்பந்தமான பிரமாணங்கள் அனுபந்தத்தில் கொடுபட்டுள்ளன.

(iii) சேவையில் தொடர்ந்து வைக்கப்படுதற்கு பெண் உத்தியோகத்தர் ஒருவர் தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து அவருடைய சேவை தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அல்லது அக்கால முடிவில் நிற்பாட்டப்படுதற்கு அவர் பாத்திரராவர்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் வேண்டப்படுதற்கமைய தீவின் எப்பகுதியிலேனும் கடமை புரிய வேண்டும்.

(v) நியமதாரி அரசினர் சேவைக்கு உரிய முறைப்படி நியமிக்கப்படுவாராயின் அரசகரும மொழிக் கொள்கை நோக்கங்களின் பொருட்டு, பதவியில் உறுதிப்படுத்தப்படும் திகதியிலிருந்து 2 வருடகாலத்துக்குள் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தரத்தைய தேர்ச்சி மட்டத்தில் விதிக்கப்படும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். இப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும்.

4. **சம்பளங்களும் சகாயப்படிகளும்.**—இப்பதவிகளுக்கான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

பட்டதாரிகளுக்கு ரூ. 3,420—4 × 120—8 × 180—6 × 240—6,780 வருடாந்தம். ரூ. 4,080, ரூ. 4,800, ரூ. 5,580 ஆகியவற்றிற்கு முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

பட்டதாரிகளல்லாதவர்களுக்கு ரூ. 2,580—11 × 120—5 × 180—4,800 வருடாந்தம். ரூ. 3,300, ரூ. 4,080 ஆகியவற்றிற்கு முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

5. **தேவைப்படும் தகைமைகள்.**—

(அ) 1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாடு அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது).

(ஆ) பட்டதாரிகளைப் பொறுத்தவரையில்—

(i) மனையியல் படிப்பித்தலில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட மனையியல் பட்டதாரியாய் இருக்கவேண்டும், அல்லது ;

(ii) மனையியல் படிப்பதில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்ற மனையியல் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

(இ) பட்டதாரிகள் அல்லாதவர்களைப் பொறுத்தவரையில்—

(i) மனையியல் படிப்பிப்பதில் 10 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்ற 1 ஆம் வகுப்பு பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும், அல்லது

(ii) மனையியல் படிப்பிப்பதில் 15 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்ற 1 ஆம் வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவராக இருக்க வேண்டும் அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு மனையியல் நிலையத்தில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத கால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் வழங்கப்பட்ட ஒரு தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் மனையியல் படிப்பிப்பதில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் அல்லது யாதேனும் உயர்ந்த ஒரு பரீட்சையில் சிங்கள மொழிமூல அபேட்சகர்கள் சிங்கள மொழியில் அல்லது இலக்கியத்தில், தமிழ் மொழிமூல அபேட்சகர்கள் தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(உ) சிறந்த நல்லொழுக்கம் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் படிகளையல்ல) இணைத்தனுப்பவேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**குறிப்பு.**—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர்தொழில் தகைமைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(இ) விண்ணப்பதாரியின் கல்வித் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான தகுதி ஆகியவை பற்றிய சமீபகால மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

(**குறிப்பு.**—ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ள அபேட்சகர்கள் இவ்வுப பிரிவின் கீழ் கேட்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

7. இவ்வரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதி, II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையிலான பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகிறது.

8. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஒன்றும் நியமிக்கப்பட மாட்டா. விண்ணப்பப் படிவங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக் கமைய தயாரிக்கப்பட வேண்டும்.

9. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப் பங்கள் அவை விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளப் பட்டதாகவும் போதிய காரணங்காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டால் அன்றி ஏற்றுக்கொள் ளப்பட மாட்டா.

10. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அது பற்றி அறி விக்கப்படும். விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியிலிருந்து 3 வாரங் களுக்குள் அத்தகைய அறிவித்தலை பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 2, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிருவாகக் கிளைக்கு) அறிவிக்க வேண்டும். இத்தேவைக்கமைய ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தமது உரிமை சீர்தூக்கப்படுவதற்கான உரித்தை இழப்பவராவர்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எண். பொ. நி/22/145,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 15 ந உ.

## (மாதிரி விண்ணப்பப் படிவம்)

### மனையியல் வட்டார வித்தியாதிகாரி பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) :————.
2. தபால் விலாசம் :————.
3. 10.9.1969 அன்றுள்ளபடி சரியான வயது —
வரு :————. மா.:————. நா.:————.
4. சாதியமும் அது எங்ஙனம் பெறப்பட்டதும் :————.
5. பின்வருவோர் பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.
6. சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறீரா? :————.
(சித்தியடைந்திருப்பின் தராதரப் பத்திரத்தின் பெயரையும் எம் மொழிமூலமெனவும் குறிப்பிடவும்)
7. மனையியலில் பெற்றுள்ள தகைமைகள் :————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்)
8. சிங்கள/தமிழ்/ஆங்கில மொழியில் பெற்றுள்ள அறிவு :————.
9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் :————.
10. தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் :————.
(ஆசிரியராயின் பதிவிலக்கம், பாடசாலைப் பெயர் தற்போதைய வருடாந்தச் சம்பளம், சம்பள அளவுத் திட்டம் அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகியவற்றைக் குறிப்பிடவும்)
11. விஞ்ஞானம் படிப்பிப்பதில் பெற்றுள்ள அனுபவம் (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்)

| பாடசாலையின்/ கல்லூரியின் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக் காலம் வ.மா.நா. | விலகிய தற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

12. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இவர்கள் உறவினராக இருக்கலாகாது) பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

3 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப்படிகளல்ல) இணைக்கப் பட வேண்டும். (அரசினர் சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை).

13. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மை யானவையும் சரியானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

8–1126—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## சிறைச்சாலைத் திணைக்களம்

### அமயத்துக்குரிய ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவி (கீழ்த் தரம்)

ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளான இருபாலாரிடமுமிருந்து 1969.9.5 ம் திகதி பிற்பகல் 4.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி முற்றாக அமயத்துக்குரியனவும் சேவைகள் தேவைப்படாத நேரத்தில் உடனடியாக நீக்கப்படக் கூடியது மாகும்.

3. **சம்பளம்.**—பதவிக்கான சம்பளம் நாளொன்றுக்கு ரூபா 3 சதம் 50 ஆகும்.

4. **தகைமைகள்**—

(i) சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சை அல்லது அதைவிட உயர் பரீட்சை, அல்லது

(ii) கல்விப் பொதுத் தராதரத் (சாதாரணம்) தேர்வில் (1) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம், (2) எண்கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது வணிக வெண் கணிதம் ஆகிய பாடங்களுட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும். இவ் ஆறு பாடங்களில் ஒரே நேரத்தில் ஐந்து பாடங்களிலாவது தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பகாரர் விண்ணப்பப்பத்திரத்தோடு பின்வருவனவற் றின் பிரதிகளை இணைக்க வேண்டும்:—
(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தாம் அடைந்த உயர் கல்விச் சான்றிதழ் ;
(இ) அண்மையில் பெறப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள் ;
(ஈ) சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் பெற்ற தராதரமும் தேர்ச்சியும் பற்றிய சான்றிதழ்கள்.

6. **வேகம்.**—சுருக்கெழுத்து—நிமிடமொன்றிற்கு 80 சொற்கள்.
தட்டெழுத்து—நிமிடமொன்றிற்கு 30 சொற்கள்.

6. **தேர்ச்சி.**—குறைந்தது 5 வருடம் சுருக்கெழுத்தில் தேர்ச்சியுள்ள வர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

7. **நிபந்தனைகள்.**—தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் சிறைச் சாலைத் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்ற வேண்டும். இப்பதவி முற்றாக அமயத்துக்குரியன. பின்பு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தர மாகவோ கோரப்படலாகாது. இவர் திறைசேரிச் சுற்றறிக்கைகள் இலக்கம் 682, 685 ஆகியவற்றின் கீழ்ச்சலுகைகள் பெறுவதற்குத் தகுதியற்றவர். மேலும் இவர் அரசாங்கப் பொதுவிதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க நடந்து கொள்ள வேண்டப்படுவர்.

8. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத் திற் செய்யப்பட்டு சிறைச்சாலை ஆணையாளர், கொழும்பு 9 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எப். டி. எல். இரத்னயக,
சிறைச்சாலை ஆணையாளர்.

சிறைச்சாலை தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9.

### (கீழ்த் தரம்) அமயத்துக்குரிய ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர் பதவிக்காகிய விண்ணப்பப் படிவம்

1. பெயர் :————.
   (அ) முதற் பெயர் :————.
   (ஆ) மற்றும் பெயர்கள் :————.
2. நிரந்தர முகவரி :————.
3. பிறந்த தேதியும் 5.9.69 இல் உள்ள வயதும் :————.
4. தகப்பனின் பெயரும் தொழிலும் :————.
5. பிறந்த இடம்—.
   (அ) விண்ணப்பக்காரரின் தந்தை :————.
   (ஆ) விண்ணப்பக்காரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
6. (அ) தேசிய இனம் :————.
   (ஆ) நீர் இலங்கைப் பிரசையா ?
      (i) வம்சாவழியிலா :————.
      (ii) பதிவினாலா :————.
7. கல்வித் தகைமைகள் :
   (i) சிங்களம் :————.
   (ii) தமிழ் :————.
   (iii) ஆங்கிலம் :————.
8. சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் உள்ள தேர்ச்சியும் அறிவும் :————.
9. வேறு விபரங்கள் :————.
10. இணைக்கப்பட்டுள்ள மூன்று நற்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் கூறப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையுமென இத்தால் நான் உறுதியளிக்கிறேன். மேலே கூறப்பட்டிருக்கும் விபரங்களில் எதாவது பொய்யானால் அல்லது சரியானதல்லவாயிருந்தால் அதை நியமனத்திற்குமுன் கண்டுபிடித்தால் நான் தகுதியற்றவரென்றும் நியமனத்திற்குப்பின் கண்டுபிடித்தால் நான் வேலையிலிருந்து நட்டஈடெதுவுமின்றி நீக்கப்படுவேனென்றும் எனக்குத் தெரியும்.

————
விண்ணப்பக்காரரின் ஒப்பம்.

திகதி :————.

8–1012—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

### விவசாயத் திணைக்களம்

**படம் வரை தொழில் பயில்வோர் (தற்காலிக பதவிகள்)**

1969 ம் ஆண்டு யூலை மாதம் 18 ம் திகதி வெளியாகிய இலங்கை அரசாங்க வர்த்தமானி இலக்கம் 14,863 ஐக் கவனத்திற் கொண்டு வரவும். 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ம் திகதி வரைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

எல். பி. மாரம்பே,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்).

விவசாயத் திணைக்களம், போதனை,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட்து மீ 11 உ.

8–993—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

### இலங்கை வங்கி

**கனிஷ்ட எழுதுவினைஞர், உதவிக் காசாளர் பதவிகள்**

இலங்கை வங்கியின் சேவையில் கனிஷ்ட எழுதுவினைஞர், உதவிக் காசாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் **ஆண்களிடமிருந்து மட்டும்** கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் தபால் மூலம் முகாமை அதிகாரி (ஆளணி), இலங்கை வங்கி, மத்திய அலுவலகம், இலங்கை வங்கிக் கட்டிடம், கொழும்பு 1, எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு செப்றெம்பர் மாதம் 17 ம் திகதி அல்லது முன்பாக அவரிடம் சேரவேண்டும்.

**விண்ணப்பப் பத்திரங்கள் பெற விரும்புவோர் தமது முகவரி எழுதி முத்திரையிட்ட (9″ × 4″) அளவினது தபாலுறை அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

**விண்ணப்பப் பத்திரங்கள் நேர்முகமாக வருவோருக்கு வழங்கப்படமாட்டா.**

1. **சம்பளமும், படிகளும். —**
   (அ) சம்பள அளவுத்திட்டம் :—ரூபா 118—தொடக்கம் ரூபா 310—வரை
   16 × 6, 4 × 7, 1 × 8, & 6 × 10
   (ஆ) இலங்கை வங்கியின் விகிதத்திற்கமைய வாழ்க்கைச் செலவுப்படி அமையும்.

2. **தகைமைகள்.—**
   விண்ணப்பக்காரர்கள்—
   (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
   (ஆ) 17.9.1969 ல். . . . .18 வயதிற்குக் குறையாதவராகவும் 22 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வித்தரம். —**
   **விண்ணப்பக்காரர் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் ஒரே முறையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தும், நான்கு பாடங்களில் திறமை சித்தியும் பெற்றிருக்க வேண்டும். அவற்றினுள் எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதமும் (தூய, தொடக்கமான, பிரயோக அல்லது உயர்), சிங்களம் அல்லது தமிழ் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருந்ததாக இருத்தல் வேண்டும்.**

4. **விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணப்படுவனவற்றின் பிரதிகளை (மூலமல்லாத) இணைத்தல் வேண்டும்.**
   (அ) **பிறப்புச் சான்றிதழ். —**

**குறிப்பு.**— (i) பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட விசேட சான்றிதழ்கள், பிறப்புப் பதிவின் சுருக்கப் பிரதிகள் ஏற்கப்படமாட்டா.
(ii) சமயதீட்சைச் சான்றிதழ்களும், சத்தியப் பிரமாணச் சான் சான்றிதழ்களும், பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக ஏற்கப்படமாட்டா.
(iii) பாவனையிலிருக்கும் பெயர்/பெயர்கள் பிறப்புச் சான்றிதழினுள்ளதற்கு மாறாக இருப்பின் பிறப்பு, இறப்பு பதிவு (அதி. 110) விதி 27 அல்லது 28 க்கு இயைய பிறப்புப் பதிவு குறிப்பு திருத்தப்பட்டிருக்கவேண்டும்.

   (ஆ) **கல்வித் தகைமைச் சான்றிதழ் .—**

**குறிப்பு.**— (i) பரீட்சைப்பகுதி ஆணையாளரால் சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டிருப்பின் அச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல்வேண்டும்.

(ii) பரீட்சைப்பகுதி ஆணையாளரிடமிருந்து சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டிராவிடத்து கல்லூரி அதிபரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அவற்றில் பின்வரும் தகவல்கள் கொடுபடவேண்டும் :—

சுட்டிலக்கமும், பரீட்சை சித்தியெய்திய திகதியும், சித்தியடைந்த பாடங்களும் அவற்றில் எய்திய தரமும்.

(இ) விண்ணப்பக்காரரின் தகைமை, குணம், இப்பதவிக்குரிய தகுதி ஆகியனபற்றி அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

5. **சேவை நிபந்தனைகள்.**—

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள்—

(அ) நியமனத்திற்குமுன் வைத்திய பரீட்சைக்கு ஆளாகிச் சித்தியெய்த வேண்டும்.

(ஆ) ஒரு வருடத்திற்குக் குறையாமலும், மூன்று வருடங்கட்கு மேற்படாமலும் தகுதிகாண் நிலையில் கடமையாற்ற வேண்டும். இக்கால எல்லைக்குள் அரசகரும மொழியில் மூன்றாந்தர நிலையில் சித்தியடையவேண்டும். இருந்தும் விசேட காரணங்களுக்காக வங்கியின் முகாமைக்குழு சிலருடைய தகுதிகாண் எல்லையை மேலும் ஒரு வருடத்திற்கு தமது விருப்பின்பேரில் நீடிக்கும்.

(இ) நற்சேவைச் சான்றுடன், சேர்ந்த திகதியிலிருந்து ஒருவருட கால முடிவில் அல்லது அரசகரும மொழியில் முதலாம் தர நிலையில் சித்தியடைந்தபின்னர், இவற்றுள் எது பின்நிகழ்வோ, அக்காலமே முதற் சம்பள உயர்வுபெறும் தகவுடையராவர்.

(ஈ) நற்சேவைச் சான்றுடன் சேர்ந்த திகதியிலிருந்து இருவருட கால முடிவில் அல்லது அரசகரும மொழியில் இரண்டாம் தர நிலையில் சித்தியடைந்த பின்னர், இவற்றுள் எது பின் நிகழ்வோ அக்காலமே இரண்டாவது சம்பள உயர்வுபெறும் தகவுடையராவர்.

(உ) ஐந்தாம் விதியின் (ஆ) பிரகாரம், திருப்தி கண்ட திகதியிலிருந்தே சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

(ஊ) 1956 ம் ஆண்டின் 33 ம் இல. அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு இப்போதுள்ள அல்லது வருங்காலத்தில் புகுத்தக் கூடிய எந்தச் சட்டங்களுக்கும் இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(எ) ஆண் பதவியர்களுக்கென இருக்கும் வங்கியின் ஓய்வுகால உபகாரச் சம்பளத்திட்டத்தில் சேரவேண்டும்.

6. **பிணைப்பணம்** (உதவிக் காசாளர் பதவிக்கு மட்டும்).—

**தேர்ந்தெடுக்கப்பட்டோர் பிணையாக ரூபா 2,500 ஒப்புவிக்க வேண்டும். இத் தொகையுள் ரூபா 500 ரொக்கப்பணமாகவும் மீதி ரூபாய் பிணையுறுதியாக இலங்கைக் காப்புறுக் கூட்டுத்தாபனத்தினால் அளிக்கப்படவேண்டும்.**

7. **பொது.**—

(அ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கென கொழும்புக்கு அழைக்கப்படுவர். பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ வங்கியினால் வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைப் **பதிவுத் தபால் மூலம்** அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பம் கிடைத்தது பற்றிய அறிவித்தல் வேண்டுவோர், தமது முகவரி எழுதி முத்திரையிட்ட தபாலுறை ஒன்றினை விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மூலையில் " கனிஷ்ட எழுதுவினைஞரும் உதவிக் காசாளரும் " அல்லது " உதவிக் காசாளருக்கு விண்ணப்பம் " என தெளிவாக எழுதவேண்டும்.

(ஈ) விண்ணப்பப் பத்திரங்கள் அல்லது விண்ணப்பங்கள் காணாமற் போனதாகவோ அல்லது தபாலில் பிந்தியதாகவோ கூறப்படும் சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முடிவு திகதிக்கு சில நாட்களுக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்புபவர்கள் தாங்களே இடர்வுகளுக்கு பொறுப்பாயிருப்பர்.

(உ) தேவையான தகுதிகள் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டாமென தயைகூர்ந்து வேண்டப்படுகின்றனர்.

**சிறந்த தகைமையுள்ள விண்ணப்பக்காரரே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பக்காரரை சிபார்சு செய்யவிரும்பும் எவரும் அவ்விண்ணப்பக்காருக்கு குணநல அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தோர் விண்ணப்பக்காரர் விடயத்தில் தலையிட்டு அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அவ்விண்ணப்பக்காரருக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.**

டீ. ஈ. பெரேரா,
முகாமையாளர், ஆளணி பகுதி

8–1048—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

## சௌக்கிப் பகுதியின் வைத்திய உத்தியோகத்தர், பல் வைத்தியர்கள், ஆசுப்பத்திரிச் செயலாளர்கள் ஆகியோருக்கான அரையாண்டுப் பரீட்சை, ஒக்டோபர் 1969

சௌக்கியப் பகுதியில் வைத்திய உத்தியோகத்தர்கள் (மெடிகல் ஒபீஸர்கள்), பல் வைத்தியர்கள், ஆசுப்பத்திரிச் செயளாளர்கள் ஆகியோர்க்கான அரையாண்டுப் பரீட்சை 1969 ஒக்டோபர் மாதம் 23 ஆம் 24 ஆம் தேதிகளில் நடைபெறுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1969 ஒக்டோபர் 24 ஆம் திகதி { அரசாங்க சேவைப் பிரமாணங்களும் நடைமுறைக் கைநூலும். ஆசுப்பத்திரியினதும், மருந்தகத்தினதும் நிர்வாகம் கணக்கு.

2. சிங்களத்தில்/தமிழிலான வாய்மொழிப் பரீட்சை 23.10.1969 ஆம் திகதியன்று நடாத்தப்படும்.

3. பரீட்சைக்குப் பிரவேசிப்பதற்குரிய விண்ணப்பங்கள் அவரவர் கடமையாற்றும் பன்முனைப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைமை அதிகாரிகளது கந்தோர்களில் பெறக் கூடியதாக உள்ள மாதிரிப் பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.

4. பரீட்சை ஆணையாளரால் இப்பரீட்சை நடாத்தப்படும். அத்துடன் இப்பரீட்சையை நடாத்துவதற்காகப் பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் அவரவர் பன்முனைப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைமை அதிகாரிகள் மூலம் பரீட்சை ஆணையாளர், மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 22.9.1969 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்பட வேண்டும். 22.9.1969 ஆம் திகதிக்கு முன்பு பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்க உதவும்பொருட்டு சகல விண்ணப்பகாரரும் தமது விண்ணப்பங்களை அவரவர் முன்முனைப் படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைமை அதிகாரிகளுக்கு 17.9.1969 ஆம் திகதிக்கு முன்பு போய்ச் சேரத்தக்கதாக அனுப்புமாறு ஆலோசனை அளிக்கப்படுகிறார்கள்.

6. 17.9.1969 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படத்தக்கனவாகும்.

வி. பி. ஏ. பெரேரா,
பிரதி அதிபதி,
(நிருவாகம்),
சௌக்கியசேவை அதிபதிக்காக.

சௌக்கியசேவை அதிபதி கந்தோர்,
கொழும்பு,
1969 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 14 ஆந் திகதி.

8–1029—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## சிவில் விமானப் போக்கு வரத்துத் திணைக்களம்

### உபயோகமற்ற பொருட்களை வாங்கி அப்புறப்படுத்துதற்கான கேள்விகள்

தளபாடச்சாமான்கள், உபயோகமற்ற சைக்கிள்கள், தட்டச்சுக்கள், மோட்டார் பற்றரிகள், டயர்கள், டியூப்புக்கள் ஆதியனவற்றை வாங்கி அப்புறப் படுத்துதற்கான சீல் செய்யப்பட்ட கேள்விகள் சிவில் விமானப்போக்கு வரத்து அதிபரால் 15.9.69 காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் சிவில் விமானப்போக்குவரத்து திணைக் களத்தில் பெறக்கூடிய படிவத்திலே அனுப்புதல் வேண்டும். உறையின் இடதுபக்க மேல்மூலையில் " உபயோகமற்ற பொருட்களை வாங்கி அப்புறப் படுத்துதற்கான கேள்வி " எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

சிவில் விமானத் திணைக்களத்திலோ, வெளியூர்க் கச்சேரிகளிலோ ரூபா 25 கேள்விவைப்புப்பணம் கட்டியதற்கான பற்றுச் சீட்டைக் காட்டி 12.9.69 பி. ப. 3 மணிவரை கேள்விப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வியாளர்கள், ஒரு பொருளையோ பல பொருட்களையோ எல்லாப் பொருட்களையுமோ வாங்குதற்கு விண்ணப்பிக்கலாம்.

15.9.69 காலை 10.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும் அப்போது கேள்வியாளர்கள் சமுகந்தர அனுமதிக்கப்படுவர்.

வி. ல. பி. த மெல்,
சிவில் விமானப்போக்குவரத்து அதிபர்.

சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களம்,
தபால் பெட்டி இல. 535,
லோற்றஸ் வீதி, கொழும்பு 1,
14.8.69

8–1100—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### அம்பாரை உப பகுதி

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்புப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமை யுடையவராவர்.

| கேள்வி இல. | வேலை விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| அ/40/68–69 .. | அம்பாறை உப பிரிவு ஆற்றுப் பிரதேசத்தில் உடங்கா அணைக்கட்டை அமைத்துத் தரல் | 50,000 .. | 100 |

3. கேள்விப் பத்திரங்கள் அம்பாறை, கல்முனை அல்லது செங்கலடி உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப் பத்திரம் அனுப்பலாமா என்பதை அறிய ஏதுவாய் இருக்கும். வெற்றுப் பத்திரம் வழங்கு முன் மேற்காட்டிய நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவரின் காரியாலயத்திலோ அல்லது கச்சேரியிலோ மேற்காட்டிய கேள்விப் பத்திரக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டல் வேண்டும்.

4. இக் கேள்விகளுக்கான மேலதிக விபரங்களை அம்பாரை உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. எம். சந்திரதாச,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அம்பாரை உப பிரிவு.

உப நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாரை,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 9 ந் உ.

8–1018—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### கசலக்க உப பிரிவு

நீர்ப்பாசன இலாகா கசலக்க உப பிரிவுக்குச் சேர்ந்த பின்வரும் வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்திய பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 16 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரையும் ஏற்று கொள்ளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும்.

2. 1969/1970, & 1970/1971 ம் வருடத்தின் சாமான்கள் கொண்டு வருதல்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 25,000 தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கும், அத் துடன் தங்கள் பேரில் பதிவு செய்யப்பட்ட (2) இரண்டுக்கு குறையாமல் சொந்த லொறிகள் உள்ளவர்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

4. இக் கேள்விகளுக்காகிய வெற்றுப் பத்திரங்கள் கசலக்க உப பிரிவு, மாத்தளை உப பிரிவு, கண்டி உப பிரிவு, நுவரேலியா உப பிரிவு ஆகிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 19 ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 1969 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 13 ம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம், கேள்வியாளராக முன் வருவோர் தங்கள் பதிவுப் பத்தி ரங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத் தில் வெளிப்படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை இவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாள ருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் இவ்வேலைக்கு ரூபா 50 தொகை யைக் கேள்விக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக் கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டைக் காட்டினும் போதுமானது.

5. இக் கேள்விகளைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றை யும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. அர். அ. குலசேகர,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கசலக்க உப பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
கசலக்க,
1969 ம் ஆண்டு ஆனி மாதம் 26 ம் திகதி.

8–1006—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

## நீர்ப்பாசனப் பகுதி

### அம்பாந்தோட்டை உப பகுதி

கீழ் குறிப்பிட்ட வேலைகளுக்கு தென்பாக பெரும்பாக நீப்பாசன பொறியியலாளர் அவர்களால் அவரது தங்கலே அலுவலகத்தில் 16.9.69 முற்பகல் 10 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்று உடன் பரிசீலிக்கப்படும்.

| வேலை விபரம் | பதிவுபெற்ற தொகை ரூபா | கேள்வுக்கட்டுப் பணம் ரூபா |
|---|---|---|
| (1) முறுத்தாவெல திட்டத்தில் இடது வாய்க்காவில் தம்பகித்தி தொல ஆற்றின் மேலாக பீலிக்கடவை .. .. | 75,000 .. | 100 |
| (2) மேல்கூறிய திட்டத்தில் கோனதெனியா ஆற்று வடிகால் கடவை .. | 85,000 .. | 100 |
| (3) முறுத்தாவெல திட்டத்தில் வலது வாய்கால் பெய்குழாய் கடவை .. .. | 80,000 .. | 100 |

2. நீர்ப்பாசன பகுதியில் மேற்குறிப்பிட்ட தொகைக்குக் குறைவற்ற பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்களே கேள்வுத் தகைமை அடைவர்.

3. அம்பாந்தோட்டை நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் 7.9.69 முதல் 13.9.69 வரை பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம். கேள்வி படிவங்கள்கோரும் சமயம் ஒப்பந்தக்காரர் தமது பதிவேட்டுடன் தற்சமயம் கைவசமுள்ள ஒப்பந்த வேலைகளும் குறிப்பிட வேண்டும். இதன் மூலமே படிவங்கள் கொடுக்கலாமோ என்பது நிர்ணயிக்கப்படும். படிவங்கள் பெறுமுன்பாக மேல் குறிப்பிட்ட கட்டுப்பணம் ஒரு கச்சேரியிலோ அல்லது மேற் கூறிய அலுவலகத்திலோ கட்டிய பற்றுச்சீட்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. மேலதிக விபரங்கள் அம்பாந்தோட்டை நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலக நேரங்களில் அறியக்கூடும்.

பெ. சத்திவேல்,
நீர்பாசனப் பொறியியலாளர்,
அம்பாந்தோட்டை உப பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
13.8.69.

8–1027—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## கமத்தொழில் திணைக்களம்

### அரசாங்கப் பண்ணைகளுக்கு புளி மாம்பழங்கள் விநியோகித்தல், பாரம் கொடுத்தல், முருங்கன் கமத்தொழிற் பண்ணையில் வரம்பு திருத்துதல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத புளி மாங்கொட்டைகளுக்கும் வரம்பு திருத்துதலுககுமான சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1969.9.12 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் கமத்தொழில் அதிகாரி (பண்ணை முகாமையும் ஆக்கமும்) யால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் எற்றுக் கொள்ளப்படும்.

(அ) (1) யாழ்ப்பாணம் தின்னவேலி கமத்தொழிற் பாடசாலைப் பண்ணைக்கு பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத 30,000 புளி மாங்கொட்டை விதைகள்.

விதை மாங்கொட்டைகள் வாரத்திற்கு 6,000 — 7,000 கொட்டைகள் விகிதம் விநியோகித்தல், பாரங் கொடுத்தல் வேண்டும். விநியோகித்தல், பாரங் கொடுத்தல் 1969 ம் ஆண்டு நொவம்பர் முதல் வாரத்தில் ஆரம்பித்து 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்பாக முடிவடைதல் வேண்டும்.

(2) முருங்கன் கமத்தொழிற் பண்ணைக்கு பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத 15,000 புளி மாங்கொட்டை விதைகள்.

விதை மாங்கொட்டைகள் மூன்று நாட்களுக்கு ஒரு முறை 2,000 கொட்டைகள் விகிதம் விநியோகித்தல், பாரங் கொடுத்தல் வேண்டும். விநியோகித்தல் பாரங் கொடுத்தல் 1969 ம் ஆண்டு நொவம்பர் மாதத்தில் ஆரம்பித்து 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்பாக முடிவடைதல் வேண்டும்.

(3) சம்மாந்துறை கமத்தொழில் பண்ணைக்கு பூச்சிகளால் சேதப்படுத்தப்படாத 20,000 புளி மாங்கொட்டை விதைகள்.

விதை மாங்கொட்டைகள் மூன்று நர்ட்களுக்கு ஒரு முறை 2,000 கொட்டைகள் விகிதம் விநியோகித்தல், பாரம் கொடுத்தல் வேண்டும். விநியோகித்தல் பாரம் கொடுத்தல் 1969 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 1 ம் திகதி ஆரம்பித்து 1969 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 25 ந் திகதிக்கு முன்பாக முடிவடைதல் வேண்டும்.

பழுதடையாத விதைகளுக்கு மட்டுமே பணம் கொடுக்கப்படும். 100 கொட்டைகளுக்கு அறவிடும் தொகையே குறிப்பிட வேண்டும்.

(ஆ) முருங்கன் கமத்தொழிற் பண்ணையின் வயல்களிலுள்ள வரம்புகள் திருத்துதல்.

தற்பொழுதுள்ள 1,000 சங்கிலி வரம்புகளில் களை பிடுங்கி வரம்பு கட்டுதல் பண்ணை முகாமையாளரின் திருப்திக்கமைய முடிக்கப்படல் வேண்டும். முடிக்கப்பட்ட வரம்பின் அடித்தளம் 3 அடியும், உயரம் 2 அடியும், மேல் மட்டம் 1 அடி அகலமும் கொண்டதாய் இருத்தல் வேண்டும். பண்ணை முகாமையாளரின அறிவித்தல் கிடைத்து மூன்று (3) நாட்களுக்குள் வேலையை ஆரம்பித்து 1969 ஒக்தோபர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் பண்ணை முகாமையாளரின் திருப்திக்கமைய வேலையை முடித்தல் வேண்டும்.

ஒரு சங்கிலிக்கு அறவிடும் தொகையைக் குறிப்பிட வேண்டும். தவணை கொடுக்கப்படமாட்டாது.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறுன கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 10 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.), கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு "

, (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர், யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் எற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினல் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விருமபின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரச்சன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினுல் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒப்பப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்துதல் வேண்டும். இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினுல் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினுல் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்.
(க. க. வும். ப.).

பேராதனை.

8–1022—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## உணவுப் பகுதி

### பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்திலும் மனிங்மார்க்கெட்டிலும் இருக்கும் சுமார் 43,965 சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 5.9.1969 வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 450/- கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. மதியாபரணம்,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
14.8.69.

8–1144—22.8.69 ம் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

நாத்தாண்டிய மின்சக்தி நெசவுக் கட்டிடத்தைத் திருத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்களால் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பின்வரும் அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக்கென ரூபா 15,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

(1) பொதுமராமத்து இலாகா,

(2) நீர்ப்பாசன இலாகா,

(3) புகையிரத இலாகா,

(4) கல்வி இலாகா,

(5) பிரதான பொதுச் சௌக்கிய பொறியியலாளர் இலாகா.

3. கேள்விப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1969 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 11 ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பி. எச். பி. டி சில்வா,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல : டிஎ/டி/193,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஆவணி மீ 10 ந உ.

8–1011—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### அம்பாறை கூறு 21 க்கு நீர் வழங்கல் பைப்புப் பொருத்துதல் சேவைக்கான கேள்விப்பத்திரங்கள்

மேற்படி சேவை சம்பந்தமாக 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ந் திகதி முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இணைப்படியில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர் பணம் கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைக் கவனமாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப்பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "அம்பாறை, கூறு 21 க்கு நீர்வழங்கல் வடிகால் சேவைக்கான கேள்விப்பத்திரம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ்மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மீளப்பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ம் திகதியிலன்றே அல்லது அதற்கு முன்போ கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர் கேட்டுக் கொள்ளப்படுமிடத்துப் பிணைப்பணம் செலுத்தவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன், அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாதவாறு தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ந் திகதி முற்பகல் 11.30 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரங்களுக்கு கேள்விக்காரர் விண்ணப்பிக்கும்போது இவ்வகையான வேலைகள் செய்வதற்குத் திறமையும் அனுபவமும் உண்டென்பதை அவர்கள் நிரூபிக்கவேண்டும்.

11. தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் தேர்ச்சியுள்ள / தேர்ச்சியற்ற இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள அதிபர் மேற்பார்வைப் பொறியியலாளர் இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ம் திகதி.

8–1096—22.8.69 ம் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

விஸ்கோஸ் றெயோன் நூல் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் உற்பத்தியாளர்களிடமிருந்தும் உற்பத்தியாளர் பிரதிநிதிகளிடமிருந்தும் 1969 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 20 ம் திகதி காலை 10.00 மணிவரை தலைவர், கேள்விப்பத்திர சபை, கிராமாபிவிருத்திச் சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்கள் ஏற்றுக்கொள்வார்.

2. மேலதிக தகவல்களுக்கும் கேள்விப் பத்திரங்களுக்கும் தயவு செய்து கிராமாபிவிருத்திச் சிறு கைத்தொழில் இலாகாவுக்கு விண்ணப்பிக்கவும்.

பி. எச். பி. டி சில்வா,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல : டிஎ/டி/46 (3/69)
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஆவணி மீ 13 ந உ.

8–1013—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## உபயோகிக்கப்பட்ட இல. 117—($17\frac{1}{2}'' \times 11''$) அளவான, 295 "கலமாசு—நோத்பீல்ட் வைன்டேர்ஸ்" விற்பனை

மேற் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் ஒரே முறையில், விலைக்கு விற்பனை செய்வதற்குரிய கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ம் திகதி பகல் 11 மணிவரை பதிவாளர் நாயகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் யாவும், பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்துடன் தபால் மேலுறையின் இடது பக்கத்து மூலையில் "கலமாசு வைன்டேர்ஸ்க்குரிய கேள்விப்பத்திர விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

இச் சாமான்களை (உபகரணங்களை) 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் திகதியிலிருந்து 30 ம் திகதி வரை, கொழும்பு 2, உனுப்பிட்டிய குறுக்கு றோட்டில், 8 ம் இலக்கத்திலிருக்கும் எமது அலுவலகத்தில். அலுவலக நேரங்களில் பரிசீலனை செய்யலாம்.

ஆர். சமரசேகர,
பதிவாளர் நாயகம்.

3 —1023—22.8.68 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

## சமூக சேவைப் பகுதி

### பிரேதங்களை அடக்கஞ் செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் தடுப்புக் காவல் இல்லம்

1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆம் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்குப் பொரலஸ்கமுவை தடுப்புக்காவல் இல்லத்தில் இருந்து பிரேதங்களை எடுத்து அடக்கஞ் செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

2. கச்சேரியில், கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் ரூபா 10 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைக் கொடுத்து சமூக சேவைப் பகுதி அதிகாரி, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 3 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளும் மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்படும் கேள்விப் பத்திரம், இணைப் பிரதிகளில் இருத்தல் வேண்டும். கேள்வியாளர் இலங்கைப் பிரசைகளாயிருத்தல் கட்டாயமானது.

3. தபால் உறையின் இடது கை மூலையில், "**பிரேதங்களை அடக்கஞ் செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள்**" எனக் குறித்து அரக்குப் பொறியிட்டு "சமூக சேவைப் பகுதி அதிகாரி, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 3" என்ற விலாசமிட்டு அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள், 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்குப் பிந்தாமல் சமூக சேவை அதிகாரிக்குக் கிடைத்தல் வேண்டும்.

4. சமூக சேவைப் பகுதிக் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில், கேள்விப்பத்திரங்கள் இடப்படல் வேண்டும் அல்லது பதிவு செய்த தபால் மூலம், மேற்படி விலாசத்திற்கு அனுப்பப் படல் வேண்டும். பதிவுசெய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத கேள்விப்பத்திரகாரர், தாமே நேரில் கொண்டுவந்து காரியாலயத்தில் சமர்ப்பிக்கலாம். அல்லது தமது ஏஜண்டு ஒருவர் மூலம் கொடுத்து விடலாம். (கேள்விப்பத்திரம் உள்ள தபால் உறையில், கேள்விப்பத்திர காரரின் முழுத் தபால் விலாசமும் பெயரும் தெளிவாக எழுதப்படல் வேண்டும்). கேள்விப்பத்திரத்தைக் கொண்டுவரும் ஏஜண்டு, காரியாலயப் பிரதான இலிகிதரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயத்தில், கேள்விப்பத்திரகாரர் அல்லது அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்ற ஏஜண்டுகள் சமூகமளிக்க லாம்.

6. 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் சமூக சேவை அதிகாரியின் காரியாலயத்தில் திறக்கப்படும்.

7. கேள்விப்பத்திரங்கள் மூடப்பட்ட திகதியிலிருந்து 6 வார காலத் திற்கு, கேள்விகளில் எவ்விதமான மாற்றமும் செய்யக் கேள்விக்காரர் கோரிக் கொள்ளக் கூடாது.

8. தெரிந்தெடுக்கப்படும் கேள்விக்காரர் தமது கேள்வி ஒப்பந் தத்தை ஏற்றுக் கொண்டதும் கேட்கப்பட்டால் தமது ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குப் பிணை நிற்போரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

9. 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் 13 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குப் பிந்திவரும் கேள்வி எழுதும் பத்திரங்கட்காகிய விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா. உரிய மாதிரிப் பத்திரங்களில் தயாரிக்கப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

10. மேற்கொண்ட விவரங்களைச் சமூக சேவை அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளவும்.

ஜே. சீ. பெரேரா,
சமூக சேவை அதிகாரிக்குப் பதிலாக.

சமூக சேவைப் பகுதி,
த. பெ. இல. 577,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 8 ந வ.

8–1007—22.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## தடுப்புக்காவல் இல்லம், கங்கொடவில்ல, பொரளஸ்கமுவ

1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு, கங்கொடவில்ல—பொரளஸ்கமுவ, தடுப்புக்காவல் இல்லத்தி லுள்ள நபர்கட்கு முகம்வளிப்பதற்கும், முடிதிருத்துவதற்கும், ஒரு பகுதிநேர முடிவினைஞர் சேவைக்கும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

2. ஒரு கச்சேரியில், ரூபா 10/- கட்டிப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளப்படும் மாதிரி விண்ணப் ப்பத்திரத்தில், இணைப்பிரதிகளில் தயாரிக்கப்படும் கேள்விகள், கொழும்பு (3), பாலதக்ஷ மாவத்தையிலுள்ள சமூக சேவைப்பகுதி அதிகாரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்வியாளர் இலங்கைப் பிரசை களாயிருத்தல் கட்டாயமானது.

3. 1969 ஆம் ஆண்டு செத்தம்பர் மாதம் 15 ஆம் திகதி பகல் 9.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கும்படி, பொறியிடப்பட்ட கேள்விகள், பதிவு செய்யப்பட்ட தபாலில், சமூகசேவை அதிகாரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுகை மேல்மூலையில், "**அரசினர் தடுப்புக்காவல் இல்லத்தில் பகுதிநேர முடிவினைஞர் சேவைக்குக் கேள்விகள்**" என்ற வார்த்தைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

4. பதிவுத் தபாலில் கேள்விகளை அனுப்பவிரும்பாத கேள்வியாளர் கள், சமூக சேவைப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில், நேரில் கொண்டுவந்து போடலாம் அல்லது இக்காரியால யத்தில் உள்ள பிரதான இலிகிதரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம். (எதுவிதத்திலும் தபால் உறையின் மறு பக்கத்தில் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும்).

5. கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள், கேள்விகள் திறக்கப்படும்பொழுது நேரில் சமூகமளிக்கலாம்.

6. 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆம் திகதி காலை 10.30 மணிக்குக் கேள்விகள் சமூக சேவைப் பகுதியில் திறக்கப்படும்.

7. தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளர், ரூபா 50/- பிணை வைப்புப் பணமாக, இக்காரியாலயத்தில் கட்டுதல் வேண்டும். அத்துடன், இந்த ஒப்பந்த நிபந்தனைகட்கிணங்கச் சேவைசெய்ய இணங்குதல் வேண்டும். ஒப்பந்த முடிவில், இந்த வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. கேள்வியாளர் ஒருவரின் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப் பத்தில், அன்னாருக்கு அறிவித்தல் கொடுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வுடன் அவர் ஒப்பந்தஞ் செய்யமறுத்தால், அன்னார் கட்டிய கட்டுப் பணத்தை இழக்க நேரிடும்.

9. 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குப்பின், கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டா. உரிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்படாத கேள்விகள், கொடுக்கப்பட்ட நிபந்தனைகட்கியையத் தயாரிக்கப்படாத கேள்விகள் ஏற் றுக்கொள்ளப்படமாட்டா.

10. மேற்கொண்ட விபரங்களைச் சமூக சேவைப் பகுதி அதிகாரியிடம் எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

ஜே. சீ. பெரேரா,
சமூக சேவை அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 8 ந வ.

8–1008—22.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## கச்சேரி—வவுனியா

கிறிஸ்தோக் குளத்தில் பொதுக்கிணறு கட்டும் வேலை சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொண்ட வெற்றிக் கேள்விப்பத்திரங்கள் (இரு பிரதிகளும்) நிரப்பி அனுப்பி வைத்தல் வேண்டும். இவ்வேலை சம்பந்தமான மேலதிக விபரங்களை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ந் திகதி பிற்பகல் 3 மணி வரைக்கும் வழங்கப்படும். அரசாங்க அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரரிடமிருந்தும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவைகளிட மிருந்தும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் இக்கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு காட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். கிராம முன்னேற்றச் சங்கங் களும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதி லிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்.

பி. சி. பெரேரா,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, வவுனியா
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 13 ந வ.

8–1062—22.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,868

### வீதிகள் அமைத்தல்—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வீதிகள் அமைப்பதற்காய கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. 2ம் பீ. ஓ. பீ. பாதை பெரியமடு.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதிவாய்ந்தவை.

3. ஒவ்வொரு விடயத்திற்கும் கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் தலா ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

4. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியினுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் " அரசாங்க அதிபர், மன்னார் " என்று விலாசமிட்டு 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி (26.8.69) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் " மன்னார் மாவட்ட வீதி அமைத்தல் " என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

5. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார் கச்சேரியில் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி (26.8.69) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக்காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 . ம் பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

7. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 6 ம் பந்தியில் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

8–1084—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு–5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், கீழ் குறிக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை ஒவ்வொரு பொருளுக்கும் எதிரே குறிக்கப்பட்டுள்ள முடிவுத் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.

| | பொருள் | | முடிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | அலுமினியத் தகடுகளும் கழிவுகளும் | .. | 29.9.69 |
| 2. | யன்னல்களும் வளித்திரைகளும் | .. | 30.9.69 |
| 3. | சாதாரண பாதுகாப்புக் கண்ணாடிகள் | .. | 1.10.69 |

கேள்விகள் முடிவடைவதற்கும் குறித்த திகதிகளுக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பொருளுக்குமாக ரூபா 100/– ஐ கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக கொழும்பு–5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை கேள்விப் பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

மேலதிக விபரங்களை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வினியோகப் பகுதி த. கா.,
200, கிருல வீதி,
கொழும்பு–5,
22.8.1969.

8–1135—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

**இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்களம் பொறிமுறைக் கிளையிலுள்ள உபயோகிக்கத்தகாத மோட்டார் வாகனங்களை விலைக்குப்பெற்று அகற்றுவதற்கான கேள்விகள்**

கேள்விகளின் பெறுபேறுகள்

| கூறு எண். | வாகனங்களின் விபரணம் | | பெற்றுள்ள கேள்விகளின் எண். | | வெற்றியடைந்த கேள்வியாளர்கள் | கேட்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மெக் 5 தொன் லொறி | ஐ.டி.எல். 109 | 1 | .. | டபிளிவு. ஏ. திஸநாயக, 41, பதேகம வீதி, கோட்டே .. .. .. | 1,712 0 |
| 2. | உவில்லிஸ் உவெல்டிங் வான் சீ ஜே. 3ஏ | ஐ.டீ.வீ. 56 | 3 | .. | பி. ப்பீ. திஸநாயக, 14, ஹரிச்சந்திரா மாவத்த, கொழும்பு 7 .. .. | 1,500 0 |
| 3. | ஒஸ்ரின் ஏ 70 | ஐ.டீ.வீ. 26 | 7 | .. | ஏ. எச். பீ. செனவிரத்ன, நெய்னு ஸ்ரோர்ஸ், திம்பலகம, இருஜாங்கண .. .. | 2,795 0 |
| 4. | வ்போட்—3½ தொன் லொறி | ஐ.டீ.எல். 125 | 5 | .. | கே. எஸ். பெரேரா, றத்கனுவா, பொகுனுவத்த, கொட்டுகொட .. .. | 2,444 0 |
| 5. | உவில்லீஸ் பிக்கப் வான் 473 டபிள்யு. டீ. | ஐ.டீ.வீ. 50 | 4 | .. | எச். கே. தர்மதாச, 42, நீர்கொழும்பு வீதி, பேலியகொட .. .. | 2,000 0 |
| 6. | டொச் ப்ளானற் சர்வீஸ் டிரக் 3½ தொன் ஐ.டீ.பீ.எஸ்.ரீ.–2 | | 12 | .. | எல். எச். சாம்சன் டீ சில்வா, 344, மாத்தறை வீதி, மாகொல்ல, காலி .. .. | 16,000 0 |
| 7. | வ்போட் வீ 8 ரிப்பர் 3½ தொன் | ஐ.டீ.எல் 166 | 2 | .. | ப்பீ. ஆர். பெரேரா, லேட்டன், பலரோட்ட களுத்தறை | 4,577 0 |
| 8. | வ்போட் வீ.டீ. ரிப்பர் 2½ தொன் | ஐ.டீ.எல். 87 | 8 | .. | எம். கே. லியனகே, கப்புகல்ல, உவக்வெல .. | 6,100 0 |
| | வ்போட் வீ. 3—2½ தொன் ரிப்பர் | ஐ.டீ.எல் 152 | 2 | .. | எம். கே. லியனகே, கப்புகல்ல, உவக்வெல .. | 5,600 0 |

| கூறு எண். | வாகனங்களின் விபரணம் | பெற்றுள்ள கேள்விகளின் எண். | வெற்றியடைந்த கேள்வியாளர்கள் | கேட்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 9. | ஒஸ்ரின் டிசல் உவாட்டர் பவுசர்.. ஐ.டீ.எல். 238 | 10 .. | டீ. ஜே. ஜெயசுந்தர, 143, உயர் மட்ட வீதி, மகாரகம .. .. .. | 8,758 0 |
| 10. | டொஜ் 3½ தொன் லொறி .. ஐ.டீ.எல். 79 .. | 4 .. | எஸ் எம். றசிக், 63, பிறின்சஸ் கேற்; கொழும்பு 12 | 5,255 0 |
| | வ்போட்வீ 8 3½ தொன் லொறி.. ஐ.டீ.எல். 157 | 4 .. | ஷை .. .. | 3,505 0 |
| | ஒஸ்ரின் லொறி 3½ தொன்.. ஐ.டி.எல். 412 | 4 .. | ஷை .. .. | 4,505 0 |
| 11. | வ்போட் வீ 8 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 54 | 1 .. | பீ. ருஜு, 259, சிறீ சங்கருஜ மாவத்த, கொழும்பு 10 | 2,222 0 |
| | வ்போட் வீ 8 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 173 | 1 .. | ஷை .. .. | 2,779 0 |
| 12. | ஒஸ்ரின் ஏ 70 .. ஐ.டீ.வீ. 30 .. | 4 .. | எஸ். றங்கையா, 286ஏ, ஸ்கின்னர்ஸ் விதி, கொழும்பு 10 .. .. | 1,399 0 |
| 13. | உவில்லிஸ் சீ ஜே 3 பீ—ஜீப் 1340/சீ .. | 3 .. | பீ. ப்பீ. சிவறட்ண, 7, 4 ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11 .. .. | 1,750 0 |
| | வ்போட் கனடியன்—மொபைல் உவேர்கசொப் ஐ.டீ.எம்.டபிளியு/1 | 5 .. | ஷை .. .. | 16,000 0 |
| 14. | உவில்லீஸ் சீ.ஜே. 3ஏ—ஜீப் 1311/சீ .. | 3 .. | பீ. சூசை அடைக்கலம், 290, 3ஏ ஸ்கின்னர்ஸ் வீதி, கொழும்பு 10 .. .. | 1,599 99 |
| | உவில்லீஸ் யூனிவேர்சல் சீ ஜே 5 ஜீப் ஐ.டி.சீ. 77 | 6 .. | ஷை .. .. | 3,111 0 |
| | உவில்லீஸ் சி.ஜே. 5—ஜீப் ஐ.டீ.சீ. 106 | 5 .. | ஷை .. .. | 2,119 88 |
| | உவில்லீஸ் சீ.ஜே. 5—ஜீப் ஐ.டீ.சீ. 108 | 7 .. | ஷை .. .. | 2,592 0 |
| | உவில்லீஸ் சீ.ஜே 5—ஜீப் ஐ.டி.சீ. 136 | 12 .. | ஷை .. .. | 6,109 88 |
| | உவில்லீஸ் பிகப் சீஜே 3 பி வான்ஐ.டி.வீ. 41 | 2 .. | ஷை ... .. | 1,399 0 |
| 15. | ஒஸ்ரின் உவாட்டர் பௌசர் 5 தொன் ஐ.டீ.எல். 268 | 2 .. | எம். பரம்ஜோதி, 276/5, ஸ்கின்னர்ஸ் வீதி, தெற்கு, கொழும்பு 10 .. .. | 10,789 0 |
| 16. | டொஜ் 2½ தொன் ரிப்பர் ஐ.டீ.எல். 180 | 4 .. | கே. வியனகே. 367/1, உவக்வெல, காலி .. | 6,500 0 |
| | வ்போட் வீ 8 2½ தொன் ரிப்பர் ஐ.டீ.எல் 187 | 4 .. | ஷை .. .. .. | 6,600 0 |
| 17. | சவலெற் வான் 1959—3809 ஐ.டீ.வீ. 92 | 3 .. | எஸ். சீ. ஒபயசேகர, எயிலந்து எஸ்ரேற், உவத்துறகம, (மே.மா.) .. .. | 6,150 0 |
| | உவில்லீஸ் சீ.ஜே. 3ஏ ஐ.டீ.சீ. 70 | 2 .. | ஷை .. .. | 105 0 |
| 18. | டொஜ் 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 68 | 11 .. | எஸ். எஸ். பாண்டியன், 441/3, ஸ்கின்னர்ஸ் வீதி, தெற்கு, கொழும்பு 12 .. .. | 4,444 44 |
| | ஒஸ்ரின் லொறி டீசல், 5 தொன் ஐ.டீ.எல். 282 | 2 .. | ஷை .. .. | 2,555 0 |
| 19. | மொறிஸ் கொமேர்சல் உவாட்டர் பௌசர் ஐ.டி.எல். 373 | 6 .. | ஆர். தங்கத்துரை, 251/14, சிறீ சங்கருஜ மாவத்த, கொழும்பு 10 .. .. | 11,399 99 |
| 20. | ஒஸ்ரின் உவாட்டர் பௌசர் 5 தொன் ஐ.டீ.எல். 266 | 1 .. | பி. எஸ். மரியான், 252/3, சிறி சங்கருஜ மாவத்த, கொழும்பு 10 .. .. | 8,688 0 |
| | ஒஸ்ரின் உவாட்டர் பௌசர் ஐ.டீ.எல். 359 | 8 .. | ஷை .. .. | 11,088 0 |
| 21. | டொஜ் 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 70 | 1 .. | ரீ. மரியந்தோனி, 209/6, ஸ்சின்னர்ஸ் வீதி, தெற்கு, கொழும்பு 10 .. .. | 3,599 0 |
| | டொஜ் 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 73 | 3 .. | ஷை .. .. | 4,289 0 |
| | வ்போட் வீ 8 3½ தொன் லொறி ஐ.டீ..எல். 129 | 3 .. | ஷை .. ... | 2,699 0 |
| | வ்போட் வீ 8 2½ தொன் ரிப்பர் ஐ.டீ.எல். 189 | 3 ... | ஷை .. .. | 3,009 0 |
| | ஒஸ்ரின் டீசல் 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 241 | 9 .. | ஷை .. .. | 8,399 0 |
| | ஒஸ்ரின் 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 242 | 4 .. | ரீ. மரியந்தோனி, 209/6, ஸ்கின்னர்ஸ் வீதி, தெற்கு, கொழும்பு 10 .. .. | 4,589 0 |
| | ஒஸ்ரின் 3½ தொன் லொறி ஐ.டீ..எல். 244 | 4 .. | ஷை .. .. | 7,289 0 |
| | ஒஸ்ரின் 5 தொன் லொறி ஐ.டீ.எல். 264 | 5 .. | ஷை .. .. | 6,089 0 |
| 22. | வ்போட் வீ 8 3½ தொன் லொறி ஐ.டீ.எல். 154 | 4 .. | எம். சிவசாமி, எஸ். தங்கராஜா, மேல்பார்த்து, 59, கொட்டாஞ்சேனை .. .. | 3,399 0 |
| | டொஜ் 2½ தொன் ரிப்பர் ஐ.டி.எல். 177 | 7 .. | ஷை .. .. | 6,289 0 |
| | வ்போட் வீ 8 2½ தொன் ரிப்பர் ஐ.டீ.எல். 188 | 1 .. | ஷை .. .. | 2,399 0 |
| 23. | ஒஸ்ரின் லொறி 5 தொன் டீசல் ஐ.டீ.எல். 285 | 4 .. | வீ. சிதம்பரம், 231/10, சிறி சங்கருஜ மாவத்த, கொழும்பு 10 .. .. | 3,888 76 |
| 24. | லாண்ட் றேுவர் ஜீப் ஐ.டீ.சீ. 96 | 8 .. | எஸ். பீ. சிவலிங்கம், 271, சிறீ சங்கருஜ மாவத்த, கொழும்பு 10 .. .. | 3,458 0 |
| | உவில்லீஸ் சீ.ஜே. 5—ஜீப் 1357/சீ | 4 .. | ஷை .. .. | 1,555 0 |
| | வ்போட் வீ 8 3½ தொன் லொறி ஐ.டீ.எல் 27 | 5 .. | ஷை .. .. | 3,600 0 |
| 25. | வோ கனேடியன்—மொபைல் உவேர்க்சொப் ஐ.டீ.எம்.டபிளியு 2 | 6 .. | எஸ். மதுரபெருமா, ககாத்துடுவா .. | 20,501 0 |

எல். ஓ. டீ. எஸ். குணசேகரா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஆகத்து மீ 10 ந் ஓ.

8–1025—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868.

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## கமத்தொழில் திணைக்களம்

### இனப்பெருக்கத்திற்கான பண்ணை மாடுகளை ஏலத்தில் விற்றல்

200 இற்கு மேலான பசுக்கள் கன்னி நாகுகள் அம்பவெல, போபத்தலாவை ஆகிய இடங்களில் ஏலத்தில் விற்கப்படும். அது பற்றிய விபரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| அம்பவெலப்பண்ணை | .. | (நுவரெலியாவிலிருந்து 6 மைல்) |
| தேதியும் நேரமும் | .. | 1969, செப்டம்பர் 2 ஆம் தேதி காலை 10 மணி |
| இனம் | .. | அயசயர் |
| தொகை | .. | பசு 50<br>கன்னிநாகு 80. |
| போபத்தலாவைப் பண்ணை | | (தலவாக்கலையிலிருந்து 17 மைல்) |
| தேதியும் நேரமும் | .. | 1969, செப்டம்பர் 9ம் தேதி காலை 10 மணி |
| இனங்கள் | .. | பிரீசியம், பிரீசியன் தரவகை, யேர்சி முதலியன |
| தொகை | .. | பசு 45<br>கன்னிநாகு 65 |

ஏலம் முடிந்தவுடன் முழுவிலைப்பணமும் உரிய பண்ணை முகாமையாளரிடம் கொடுக்கப்படல் வேண்டும். வாங்கிய மிருகங்களை வாங்கிய அன்றே எடுத்துச் செல்லல் வேண்டும். இன்னும் மேலதிக விபரம் அறிய விரும்புவோர் பண்ணைவிலங்கு அலுவலரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். அவர் முகவரி பி. எஸ். எஸ். ஐ. கட்டிடம், யோக்கு வீதி, கொழும்பு, (தொலைபேசி 22454) ஏலமிடப்படும் மிருகங்களை ஏலமிடப்படும் நாளுக்கு முதல் நாள் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பார்வையிட்டுக் கொள்ளலாம்.

கமத்தொழில் பதில் பணிப்பாளர்,
(விலங்குப் பெருக்கமும் உடனலமும்.)

கமத்தொழில் திணைக்களம்,
அஞ்சல்பெட்டி 1284.
கொழும்பு.

8–1081—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

---

## அறிவித்தல்

18.8.69 ஆம் திகதி திக்வல்லயில் மாலதீவு கப்பலான "ஓறிமஸ்" ஏலத்தில் விற்கப்படுமென 8.8.69 ம் திகதி வெளிவந்த 14,866 இலக்க அரசாங்க வர்த்தமான அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எச். பீ. வீரரத்ன,
மேலதிக அரசாங்க அதிபர்,
மாத்தறை அரசாங்க அதிபருக்காக.

8–420—22.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,868

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஓகத்து .. | 1.8.69 | வெள்ளி | .. | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி | .. | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி | .. | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி | .. | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி | .. | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் .. | 5.9.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் . | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசம்பர் . | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆ யூன் மீ 13 ந் உ

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.